**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.856/2022**
**Prosecution Witnesses :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சங்கரநாராயணன் | Caste | : |
| Husband Name/ Father Name | : அண்ணாமலை | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(05.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் திருநெல்வேலி மானூர் தாலுகா, மேலப்பிள்ளையார்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனது மகன் அய்யப்பன் கள்ளிக்குடி அருகில் மணல்குவாரியில் கிட்டாச்சி வண்டி ஓட்டிவந்தார். கடந்த 09.06.2019ம் தேதி இரவு 8.30 மணியளவில் எனது மகனின் வண்டியின் உரிமையாளர் எனக்கு போன் செய்து எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்றும் அவர் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தகவல் சொன்னார். நானும் எனது மனைவி சங்கரம்மாளும் இரவு சுமார் 1 மணிக்கு மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். ஆனால் அதற்குள் எனது மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனது மகனுடன் வேலை பார்த்த நபர்கள் எனது மகன் மோட்டார் சைக்கிளில் சென்ற போது டவேரா கார் இடித்துவிட்டதாக சொன்னார்கள். அன்றே தேதியே போலிசார் மருத்துவமனையில் வைத்து என்னிடம் விபரம் கேட்டு எழுதிக்கொண்டார்கள் நான் அதில் கையெழுத்து போட்டேன். என்னிடம்

காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் விபத்து நடந்த சமயம் திருநெல்வேலி மாவட்டம் மானூர் தாலுகா மேலப்பிள்ளையார் குளத்தில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை.